# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்ட பீடம்
## சட்டமாணிப் பரீட்சை, வருடம் I - 2016/2017

### அரசியலமைப்புச் சட்டம் - I

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "சனநாயகம் என்பது ஒரு நாட்டில் அரசியலமைப்பபிமாணியக் கருத்தேற்பானது பெற்றுக்கொள்கின்ற உயிரோட்டமான நிலையின் மீது தங்கியுள்ளது. ஆயினும், அக்கருத்தேற்பினை மக்களது இறைமை என்ற கருத்தேற்புடன் முழுமையாக ஒத்திசைவிக்க முடியாது."

   மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அரசியலமைப்பபிமாணியக் கருத்தேற்புக்கு அடிப்படை ஆதாரமான அரசியலமைப்புக் கோட்பாடுகளுடனும் பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளிலிருந்தான உதாரணங்களுடனும் தொடர்புபடுத்தி பகுத்தாராய்க.

2. "சட்டவாட்சி என்பது எந்தவொரு அரசியலமைப்பினதும் மூல அடிப்படையாதாரமாக இருக்க வேண்டுமாயினும், சட்டவாட்சியின் கருத்தானது தெளிவற்றதாகவோ அல்லது துல்லியமற்றதாகவோ தொடர்ந்திருத்தலாகாது."

   மேலுள்ள கூற்றின் வலிதாந்தன்மையைப் பகுத்தாராய்வதுடன் கருத்துரையும் செய்க.

3. 'சகவாழ்வு மற்றும் அமைதியான வாழ்வுமுறைக்கலை' என்றழைக்கப்படுகின்ற புதியதொரு வாழ்வுமுறை தொடர்பான விழிப்புணர்வைப் பரப்புரைசெய்வதில் நீதா என்பவள் ஈடுபட்டு வருகின்றாள். இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அவளுடைய ஓரிரு நண்பர்களுடன் சேர்ந்து தனிமையான தனிஆட்களின் இல்லங்களுக்குச் சென்றுசந்தித்து வருகின்றனர். பரந்தகன்றதொரு கேட்போரைச் சென்றடையவேண்டுமென்ற எண்ணத்துடன் விளம்பர இயக்கச்செயற்பாடொன்றை அண்மையில் அவள் தொடங்கினாள். அத்தகைய விளம்பரங்க ளிலிருந்த கவர்ச்சி வாசகங்களினால் ஈர்க்கப்பட்ட, வேறுபட்ட சமயங்களைச் சேர்ந்த கணிசமானதோர் எண்ணிக்கையிலான மக்களும் அந்த இயக்கத்துடன் சேர்ந்தனர்.

ஒரு மாதத்துக்குப் பின்னர், 'சகவாழ்வு மற்றும் அமைதியான வாழ்வுமுறைக்கலை' அமைப்பினது அத்தகைய விளம்பரங்கள் பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாகும் என்று குறிப்பிட்டு அதனுடைய அனைத்து விளம்பரங்களையும் தடைசெய்கின்றதான ஒழுங்கு விதியொன்றை சமய விவகாரங்களுக்கான அமைச்சு பிறப்பித்துள்ளது. நாட்டில் பெரும்பான்மையினரால் பின்பற்றப்படுகின்ற சமயத்தைப் பாதுகாக்கவும் காப்பளிக்கவும் இந்த ஒழுங்குவிதியைப் பிறப்பிப்பது அவசியமானதொன்றாகும் என்று அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது. ஒரே மாதிரியான ஆனால் கவர்ந்திழுக்காத வழிப்புணர்வு இயக்கமுறைச் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற வேறெந்தவொரு சமயத்தின் மீதும் தடைசெய்கின்றதான ஒழுங்குவிதிகள் பிறப்பிக்கப்படவில்லையென நீதா மேலும் காணுகின்றாள்.

தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நீதா நம்புவதுடன், வழக்கு நடவடிக்கையைத் தொடங்குவதற்கும் விரும்புகிறாள். நீதாவுக்கு ஆலோசனை கூறுக.

4. "19வது திருத்தத்துக்குப் பிந்திய சனாதிபதிப் பதவியானது நாட்டில் சனாதிபதியின், அதற்கெதிரெதிராக பிரதம அமைச்சர் அல்லது அமைச்சரவையினது நிறைவேற்று அதிகாரத்தை முனைப்புக் குறையச்செய்யவில்லை."

   நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை உதாரணங்கள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

5. பாராளுமன்ற இறைமையானது வலிமையானதொன்றாகவும் பிரித்தானிய வரலாற்றுக் கருத்தேற்பாகவும் இருப்பினும், இரண்டாவது குடியரசு அரசியலமைப்புக்குப் பின்னர் அதனுடைய முக்கியத்துவம் மற்றும் பொருத்தமுடைமை இலங்கையில் சிறப்பற்றதாகக் காணப்படுகின்றது. இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழான பாரளுமன்றமானது, முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழான பாராளுமன்றத்துடன் ஒப்பிடுகையில், சட்டவாக்கரீதியாக இறைமையுடையதோ அல்லது மீயுயர்ந்ததோ அல்ல.

   நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் வழக்குச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

6. அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பது பகிரங்க தத்துவத்தைப் பிரயோகித்தல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்கின்ற வகையில் சனநாயகத்தை உறுதிப்படுத்தும் முக்கியத்துவமிக்க முறைமையொன்றாகும். அத்தகைய சீர்திருத்தம் எவ்வாறு பயனுறுதன்மை கொண்டது என்பதானது, அத்தகைய சீர்திருத்தத்துக்கும் அவற்றை மேற்கொள்ளுவதற்காகப் பின்பற்றப்படுகின்ற நடபடிமுறைகளுக்குமான அடிப்படை ஆதாரக்கூறில் தங்கியிருக்கும். இலங்கையின் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான வரலாறு மற்றும் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயற்பாடுகள் என்பவற்றிலிருந்தும் எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிட்டு ஆராய்க.

7. நீதித்துறையினை, சனநாயகச் செயன்முறைக்கு வெளியிலானதான, அரசினுடைய மூன்றாவது கரம் என்று சிலவேளைகளில் விபரிக்கப்படுகின்றது. அரசின் ஏனைய உறுப்பமைப்புக்களிலிருந்தும் சட்டத்தின் பொருள்கோடல் தொடர்பிலும் நீதித்துறையானது சுயாதீனமுடையதாயிருத்தல் வேண்டுமென்பது தேவைப்படுத்தப்படுகின்றது. மாறாக, அரசியலமைப்பு சனநாயகத்துக்கு நீதித்துறைச் சுதந்திரமானது அத்தியவசியமானதாகும்.

உதாரணங்களைச் சுட்டிக்காட்டி ஆராய்க.

***********